மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: என்னிடமுள்ள தகவல் 29—5—1973 தேதி மாற்று யோசனை தருமாறு தலைமைச் செயலாளர் எழுதியதாகத் தகவல் இருக்கிறது. மேற்கொண்டு தகவல் இல்லை. உறுப்பினர் அவர்கள் அப்படி அவர்களுக்கு எழுதியிருந்தால் அது பரிசீலனையில் இருக்கும். அது முடிந்து அரசாங்கத்திற்கு வந்த பிறகு அரசாங்கம் பரிசீலித்து முடிவு எடுக்கும்.

நசுவினி ஆற்றின் குறுக்கே அணை

* 547 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டைக்கு அருகிலுள்ள நசுவினி ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) இத்திட்ட மதிப்பீட்டிற்கு அரசினரால் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு தலைமைப் பொறியாளரால் தொழில் நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் முடிவு செய்தபின் இத்திட்ட வேலைகள் துவங்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்த நசுவினி ஆற்றுத் திட்டத்திற்கு எவ்வளவு ரூபாய் மதிப்பீடு போடப்பட்டுள்ளது? அதனால் எவ்வளவு ஏக்கர் பாசன வசதி கிடைக்கும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இத் திட்டத்திற்கு 20 லட்சம் ரூபாய் செலவாகும். இதனால் 3,551 ஏக்கர் நிலப்பரப்பு பலன் அடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமராவதி ஆற்றிலிருந்து பிரியும் கால்வாய்கள்

* 548 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில், அமராவதி ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் கால்வாய்களைச் சீரமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?